பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை [illegible] காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 6 (23—10—71) சனி — வெளியூர்: ஐப்பசி 7 (24—10—71) ஞாயிறு [இதழ்: 108

சில்லறை நாணயம்— பதுக்கினுல் தண்டனை

குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டம்

புதுடில்லி, அக். 23—

"சில்லறை நாணயங்களை உருக்குவதோ அல்லது உருக்குவதற்காகப் பதுக்கிவைப்பதோ தண்டனைக்குரிய குற்றமாகும்" என்று குடியரசுத் தலைவர் பிறப்பித்துள்ள அவசரச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

தவருன கற்பனைகள் வேண்டாம்

உரிமைகளை ஒருபோதும் பறிபோக விடோம்!

மாநில உரிமை பற்றி அனைவரும் அமர்ந்து பேசித் தீர்மானம் கொண்டுவரத் தயார்

சட்டமன்ற மேலவையில் முதலமைச்சர் உறுதிமொழி -- அரசியல் சட்டத் திருத்த விவாதங்களுக்குப் பதிலுரை

சென்னை, அக். 22—

அரசியல் சட்ட 24-வது திருத்தத்துக்கு ஒப்புதல் அளிக்கும் மசோதாமீது சட்டமன்ற மேலவையில் நடைபெற்ற விவாதத்துக்கு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் பதிலளித்தபோது, 'இந்தச் சட்டத் திருததத்தால் ஏற்படவிருக்கும் நன்மையை விடுத்து, தீமைகளே ஏற்படும் என்று வீண் கற்பனை செய்யவேண்டாம்' என்று கேட்டுக் கொண்டார்.

"இந்தத் திருத்தத்தால் மாநில உரிமைகள் பறிக்கப் பட்டுவிடும் என்ற அச்சம் தேவையில்லை; 'உறவுக்குக் கை கொடுப்போம் -- உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்ற முழக்கத்தை நாம் விட்டுவிடப்போவதில்லை; அதனை முழங்கியே தீரவேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:—

இந்த அரசியல் சட்டத் திருத்தத்தால், 'எல்லா உரிமைகளுக்கும் ஆபத்து' என்று பொருளில்லை.

இந்தத் திருத்தம், 'சங்கம் அமைக்கும் உரிமை -- பேச்சுரிமை -- எழுத்துரிமை ஆகிய எல்லா உரிமைகளையும் பறித்துவிடும்' என்பது கற்பனையே தவிர, உண்மை அல்ல!

உரிமைகளைத் தருகின்றபோது, அதனுல் என்னென்ன ஆபத்துக்கள் வரும் என்பதை எண்ணிக்கொண்டிருக்கக் கூடாது; என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்றே எண்ணப் பழக வேண்டும்.

'எண்ணுவதெல்லாம் நல்லதைப் பற்றியே' எண்ணுவது என் மதுதான் உயர்ந்த போக்காகும்.

அறுவைச் சிகிச்சைக்கு டாக்டர் கையில் கத்தியைத் தந்துவிட்ட பிறகு, 'அவர், அறுவைச் சிகிச்சைதான் செய்வார்' என்றுதான் எண்ண வேண்டும்; 'அவர், நோயாளியின் கழுத்தை அறுத்துவிடுவார்' என எண்ணி -- கற்பனைப் பயம் கொள்ளக்கூடாது!

அடிப்படை உரிமை பறிக்கப்பட்டது என்பதற்காக இது வரையில் எத்தனை பேர் வழக்கு மன்றம் சென்ருர்கள்? பெருந்தனக்காரர்கள் -- வியாபாரிகள் -- வணிகக் கோமான்கள் -- நிலச்சுவான்தாரர்கள் போன்ற ஒரு சிலர்தான் இந்த 24 ஆண்டுகளில் -- பலகோடி மக்கள் உள்ள இந்த நாட்டில் -- நீதிமன்றத்தின் துணையை நாடியிருக்கின்றனர்; இதற்குக காரணம் என்ன? -- '100-க்கு 90 பேருக்கு இந்த நாட்டில் சொத்து இல்லை' என்பதுதான்!

இன்னும் சொல்லப்போனுல், நமது அரசுதான் டல இலட்சம் ஏழைகளைச் சொத்துள்ளவர்களாகக் கொண்டிருக்கிறது!

தமிழகத்தில் மூன்று இலட்சத்துககு மேற்பட்ட 'பட்டா'க்களை வழங்கி, 'இது உனது நிலம் -- இது உனது மனை -- இவை அனைத்தும் உனக்கு உரிமையுள்ள சொத்து' எனக கூறியது.

அதுமாத்திரமல்ல; தஞ்சை மாவட்டத்தில் விவசாயத தொழிலாளர்கள் சொந்தக குடியிருப்புகள் இல்லாமல் துயரப் பட்டார்கள்; புதிதாகச் சட்டம் இயற்றியதன மூலம் குடியிருப்புகள் அவர்களை நாடி வருமாறு செய்தோம்!

'எட்டு ஏக்கர் வைத்திருக்கிருேமே -- இதையும் எடுத்துக் கொள்ளும் காலம் வந்து விடாதா' என்று இங்கே கேட்கப்பட்டது.

அப்படி ஒரு காலம் வருமானுல், அதற்கும் சிரம் வணங்கி வழி விடடுத்தான் ஆகவேண்டும்.

அதை எதிர்ப்போமானுல், அந்தப் புயலில் சிக்கிய நாணலைப் போன்றுகூட வளைந்து தப்பிக்க முடியாது! வேரோடும்-- வேரடி மண்ணோடும் நாம் வீழ்ந்தப்படவேதைத் தடுக்க முடியாது!

அந்தப் புயலை உருவாக்கும் மக்கள் சக்தி எத்தகையது -- எப்படி உலகை மாற்றவல்லது -- என்பது பற்றி சோவியத் யூனியனின் நீதிபதி அல்ல — அமெரிக்க நாட்டு நீதிபதி சொல்வதை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்:—

"சட்டங்களை மாற்றியமைக்கும் வல்லமை படைத்தது மக்கள் சக்தி; மக்கள் விருப்பத்தின்படி தான் சட்டங்களை உருவாக்க முடியும்; மக்கள் விரும்பும் வரைதான் அவை நிலைத்திருக்க முடியும்."

இப்படிச் சொன்னவர் அமெரிக்க நாட்டு நீதிபதி என்பதை மறந்துவிடக் கூடாது.

சட்டங்களில் திருத்தங்கள் செய்துவிடுகின்ற காரணத்தினுலேயே -- எதை வேண்டுமானுலும் அந்தச் சட்டம் செய்துவிட முடியாது என்பதை, நாடாளுமன்றத்தில் அமைச்சர் மோகன் குமாரமங்கலம் அவர்கள் ஓர் எடுத்துக் காட்டின் மூலம் விளக்கினுர்.

"ஆங்கில நாட்டின் வலிமை மிகுந்த சட்டம் கையில் இருக்கின்ற காரணத்தால், நாடாளுமன்றம், நீலக் கண் படைதத எல்லாக் குழந்தைகளையும் தேம்ஸ் நதியில் தூக்கி எறிய முடியுமா?" என்ற கேள்விக்கு, 'டைம்ஸ்' பத்திரிகையில், 'முடியும் -- சட்டத்தால்; ஆனுல், அந்தச் சட்டம் செயல்படுத்தப்பட்ட அடுத்த நாள் நாடாளுமன்றம் இருக்காது -- ஒரு நாள்கூட அது நீடிக்காது' என்று பதில் தரப்பட்டதாக அமைச்சர் மோகன் குமாரமங்கலம் கூறினுர்.

ஆகவே, இந்தச் சட்டம் திருத்தப்படுவதாலேயே எதை வேண்டுமானுலும் செய்துவிட முடியாது!

இப்போது இருக்கின்ற சட்டத்தின்படியேகூட, குடியரசுத் தலைவர் நினைத்தால் சர்வாதிகாரியாக முடியும்; அவர்தான் தலைமையமைச்சரை நியமிக்கிருர்; அவர் பார்த்துத் தமது மனைவியைக்கூட நாளைக்கே தலைமையமைச்சர் ஆகலாம்; அந்த அம்மையார் ஆறு மாத காலம் அந்தப் பதவியில் இருக்கலாம்; பிறகு தேர்தல் நடத்த உத்தரவிடலாம்; தேர்தலுக்குப் பிறகும் நினைத்தால் அவரே சர்வாதிகாரி ஆகிவிட முடியும்.

ஆனுல், அப்படிச் சர்வாதிகாரியாக மாறுபவர்கள் எத்தனை நிமிடத்திற்கு இந்தியாவை ஆள முடியும்?

"நீதிபதிகளின் தீர்ப்புக்களை மறுத்து சட்டங்களைச் செய்து கொண்டே போவது சரியா? அது நீதிபதிகளை அவமானப்படுத்துவது ஆகாதா?" என்ற கருத்தும்பட உறுப்பினர் வசந்த பாய் கேட்டார்.

அவர் வாதத்தை மறுத்து, 'நீதிபதிகள் யார்? நீதிமன்றங்கள், மக்கள் மன்றத்தைவிட உயர்ந்தனவா?' எனும் தாக்குதல்களைக்கூடத் தொடுத்தார்கள்-- இங்கே!

நான் அந்த அளவுக்குக்கூடப் போகவில்லை; நீதிபதிகளையோ நீதிமன்றங்களையோ குறைத்தும் பேசத் தயாராக இலலை.

நீதிபதிகள் என்ன தீர்ப்புத் தருகிருர்கள்? 'அமைத்துத் தரப்பட்ட சட்டததின்படி இதற்கு இடமில்லை' என்று கூறுகிருர்கள்; அதன் பொருள் என்ன? 'வேறு நல்ல சட்டத்தை இயற்றித் தாருங்கள்' என்று சூசகமாக வியாக்கியானம் செய்து, மறைமுகமாக நமக்கு அறிவிக்கிருர்கள்.

அப்படிப்பட்ட நீதிபதிகளை கௌரவப்படுத்துவதற்காகத்தான், இதுவரையில் 23 திருத்தங்கள் செய்யப்பட்டன; இப்போது 24-வது திருத்தம் வந்திருக்கிறது.

மாநிலத்து உரிமைகள் பாதிக்கப்படாத வகையில் செயல்படவும், மாநிலத்து உரிமைகள் எவை எவை அதிகரிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் கூடிக்கலந்து ஆலோசித்து -- அதற்குரிய தீர்மானத்தை நிறைவேற்றுவோம் என உறுதியளிக்கிறேன்."

எல்லையில் நிலைமை கடுமையாகிறது

இந்திய ரிசர்வ் படைகளுக்கு அழைப்பு

புதுடில்லி, அக். 23—

இந்திய எல்லையோரத்தில் பாகிஸ்தான் படைகள் மேலும் மேலும் அதிகமாகக் கொண்டுவந்து குவிக்கப்படுவதால் இந்திய இராணுவம் தன்னுடைய 'ரிசர்வ்' படைகளை அழைத்திருக்கிறது.

இந்தியக் கடல்--விமானப் படைகளும் தங்களுடைய ரிசர்வ் படையில் சில பிரிவினரை அழைத்திருக்கின்றன.

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி அமைச்சரவைக் கூட்டத்தில் கூறியிருக்கிருர்.

"பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதால் நாடு எதற்கும் தயாராக இருக்க வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தினுர்.

தென்காசி சம்பவம்

விசாரணைக் கமிஷன் அறிக்கை

சென்னை, அக். 23 —

"திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் சென்ற ஆண்டு செப்டம்பர் 26-ம் நாள் போலீசார் நடத்திய தடியடிப் பிரயோகமும் -- துப்பாக்கிப் பிரயோகமும் அவசியமான காரணங்களுக்காவும், நியாயமான காரணங்களுக்காகவும் நடத்தப்பட்டுள்ளன" என்று விசாரணைக் கமிஷன் தனது அறிக்கையில் கூறியிருககிறது.

துப்பாக்கிப் பிரயோகம் குறித்து விசாரணை நடத்த மாவட்ட செஷன்சு நீதிபதி ஏ. வரதராசன அவாகளைக் கொண்டு ஒரு நபர் கமிஷனை அரசு நியமிததது.

விசாரணைக் குழுவின் அறிக்கை நேற்று சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

மத்திய அமைச்சரவை மந்திராலோசனை

"இந்திய—பாகிஸ்தான் எல்லையில் நிலவரம் இன்னும் கடுமையாகவே இருக்கிறது"

பட்டம் பெற்றவர்கள்

சென்னை, அக். 23—

சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவின் மூன்று நாளான நேற்று 3,022 பேர் நேரில் வந்து பட்டம் பெற்றனர்; இவர்களில் 1 176 பேர் பெண்களாவர்.

1,045 பேர் அஞ்சல் மூலம் பட்டம் பெற்றனர்.

பட்டமளிப்பு விழாவில் இரண்டாம் நாளன்று 1,780 பேர் நேரில் வந்து பட்டம் பெற்றனர்; இவர்களில் 248 பேர் பெண்களாவர்.

1,275 பேர் அஞ்சல் மூலம் பட்டம் பெற்றனர்.

நிலவிதிகளை மீறுகிறது பாகிஸ்தான்

சண்டிகார், அக். 23—

சர்வதேச நில விதிகளை மீறி, தெற்கே இராஜஸ்தானிலிருந்து வடக்கே லடாக் வரையில் சர்வதேச எல்லை நெடுக சுரங்கக் கண்ணிகளை பாகிஸ்தான் படைகள் வைத்துள்ளன.

1965-ம் ஆண்டு சண்டையின் போது இந்தியப் படைகள் முன்னேறிய பகுதிகளில், பாகிஸ்தான் பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் இந்தச் சுரங்கக் கண்ணிகள் வைக்கப்படுகின்றன.

குடியரசுத் தலைவர் பிறப்பித்த அவசரச் சட்டங்களின் நோக்கம்

வங்க தேச அகதிகளால் ஏற்பட்டுள்ள பெருஞ் செலவைச் சமாளிப்பதற்காம்

நவம்பர் 15-ம் நாள்முதல் நடைமுறைக்கு வரும் கூடுதல் கட்டணங்களின் விவரம்

புதுடில்லி, அக். 23—

வரும் நவம்பர் 15-ம் நாள்முதல் நடைமுறைக்கு வரக்கூடிய மூன்று அவசரச் சட்டங்களைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள், நேற்று நள்ளிரவில் பிறப்பித்தார்.

இந்த அவசரச் சட்டங்கள்மூலம் இரயில் கட்டணங்கள் -- விமானப் பயணக் கட்டணங்கள் -- கார்டு நீங்கலான அஞ்சல் துறையைச் சார்ந்தவைகளுக்கான கட்டணங்கள் உயர்த்தப்படுகின்றன.

வங்க தேச அகதிகளினால் ஏற்பட்டுள்ள பெருஞ் செலவைச் சமாளிப்பதற்காகவே ரூ. 70 கோடி அளவில் கூடுதல் வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

அவசரச் சட்டங்கள்மூலம் இரயில் -- விமானங்கள் -- அஞ்சல் துறைகள் ஆகியவைகளின் கட்டணங்களை உயர்த்துவதற்கும், புதிய வரிகள் விதிக்கப்படுவதற்கும் அதிக அதிகாரங்களை மத்திய அரசு பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

வரியின் அவசியத்திற்குக் காரணம் ?

இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து டிசம்பர் முடிய மத்திய அரசின் வரவு -- செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 570 கோடி பற்றுக்குறை ஏற்படும் என்று கருதப்படுவதால் புதிய வரிகள் விதிக்கப்படுகின்றன.

இடைக்காலத் தேர்தலுக்குப் பின்பு நிதியமைச்சர் சவாண் தாக்கல் செய்த முதல் வரவு -- செலவுத் திட்டத்தில், அகதிகள் மறுவாழ்வுக்காக ரூ. 60 கோடி ஒதுக்கினர்; பின்பு இதே வகையில் ரூ. 200 கோடி ஒதுக்குவதற்கான மானியக் கோரிக்கை ஒன்றையும் அவர் கொண்டு வந்தார்.

வரவு -- செலவுத் திட்டத்தில் இந்தச் செலவுகள் சேர்க்கப்படாமலே ரூ. 235 கோடி பற்றுக்குறை இருந்தது; இதையும் சேர்த்த மொத்தப் பற்றுக்குறை ரூ. 496 கோடி ஆயிற்று.

வெள்ளம் -- வறட்சி ஆகிய வகைகளில் மாநிலங்களுக்கு மத்திய அரசாங்க வரவு--செலவுத் திட்டத்தில் ரூ. 50 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது; ஆனால் இந்த ஆண்டில் இரண்டுமே மிக அதிகமாக இருந்ததால், இவ்வகையில் மத்திய அரசு ரூ. 130 கோடி செலவிட வேண்டியதாக இருக்கிறது; ஆகவே, இவ்வகையில் புதிதாக ரூ. 80 கோடி பற்றுக்குறையாகிறது; ஆக எல்லாம் சேர்த்த மொத்தப் பற்றுக்குறை -- முதலில் குறிப்பிட்டதுபோல் -- ரூ. 570 கோடி ஆகிறது.

மத்திய அரசு விதிக்கும் வரிகள் மூலமும், மாநிலங்கள் இதே போல், 'அகதிகள் நிவாரண சர்சார்ஜ்' என்ற பெயரில் விதிக்கக்கூடிய வரி மூலமும் முழு ஆண்டில் கூடுதலாக ரூ. 70 கோடிவரை கிடைக்கக்கூடும்.

90 இலட்சத்துக்கும் அதிகமான அகதிகளைப் பராமரிப்பதால் ஏற்பட்டுள்ள பெரும் செலவைச் சரிக்கட்டுவதற்காகக் கூடுதல் வரிகளை விதிப்பது பற்றி முதலமைச்சர்களுடன் ஆலோசனை செய்த பிறகு மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

இரயில் கட்டண வரி

முதல் அவசரச் சட்டத்தில் இரயில் பயணக் கட்டணத்துக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது; ஒரு ரூபாய்க்கும் அதற்குக் கூடுதலாகவும் உள்ள இரயில் பயணக் கட்டணங்கட்கு 5 சதவிகிதம் (ரூபாய்க்கு 5 காசு வீதம்) வரியாகும்.

ஒரு ரூபாய்க்குக் குறைவாக உள்ள பயணக் கட்டணத்துக்கும் அல்லது ஒற்றைப் பயணம் ஒரு ரூபாய்க்குக் குறைவாகவும் இருக்கக்கூடிய சீசன் டிக்கெட்டுகட்கும் விலக்கு அளிக்கப்படுகிறது.

விமானப் பயண வரி

உள்நாட்டு விமானம் பயணத்துக்கு 5 சதவிகித கூடுதல் வரி விதிக்கப்படுகிறது.

அஞ்சல் கட்டண வரி

இரண்டாவது அவசரச் சட்டத்தில், அஞ்சல் கார்டுகள் -- பதிவு செய்யப்பட்ட செய்திப் பத்திரிகைகள் நீங்கலாக மற்ற எல்லா அஞ்சல்கட்கும் (கவர்கள், இன்லண்டு லெட்டர்கள், அஞ்சல் தலைகள் ஆகியவைகளுக்கு) 5 காசு கூடுதல் வரி விதிக்கப்படுகிறது.

தந்திகள், மணியார்டர்கள் ஆகியவற்றிற்கும் இது பொருந்தும்.

மூன்றாவது அவசரச் சட்டத்தில் 'எக்ஸ்சேஞ்க் பில்'கள், 'பிராமிசரி நோட்டு'கள், கடன் பத்திரங்கள், இன்சூரன்சு பாலிசிகள், டிபெஞ்சர் பத்திரங்கள், பங்குகள் மாற்றம், இரசீதுகள் ஆகியவற்றிற்கு 10 காசு கூடுதல் தீர்வை விதிக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர, செய்திப் பத்திரிகைகள் மற்றும் இதர சஞ்சிகைகளுக்கு 2 காசு 'எக்சைஸ்' வரி (உள்நாட்டுப் பொருள் வரி) விதிக்கப்படுகிறது.

'கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கவே சலுகைகள் தரப்படுகின்றன'

'கட்டாயப்படுத்துவதன் மூலம் சீர்திருத்த இலட்சியங்கள் நிறைவேற இயலாது'

சட்டப்பேரவையில் அமைச்சர் சத்தியவாணிமுத்து விளக்கம்

சென்னை, அக். 23--

கலப்புத் திருமணம் செய்துகொள்வதுபற்றித் தமிழகச் சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும் -- அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :--

முத்தையா (சுதந்தரா):—"கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களின் குழந்தைகளுக்கு அரசு அலுவலகங்களில் முதலிடம் தரும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா ?"

அமைச்சர் சத்தியவாணிமுத்து :— "அப்படி ஏதும் இல்லை."

துரை முருகன் (தி மு. க.):— "கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு அரசு அலுவல்களில் முதலிடம் கொடுத்தால்தான், சாதி -- மத வேறுபாடு அறவே ஒழியும்; ஆகவே, முதலிடம் கொடுக்கப்படுமா ?"

அமைச்சர் :—"கலப்புத் திருமணம் செய்துகொள்ள அதிக அளவில் மக்கள் முன்வரவில்லை; அதை ஊக்கப்படுத்துவதற்குத்தான், கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு, 'தங்க மெடல்' பரிசு கூட அளிக்கிறோம்; ஆனால், கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள் அதை வெளியே சொல்வதற்குக்கூட அஞ்சுகிறார்கள்; பெரும்பாலான கலப்புத் திருமணங்கள் கொள்கை அடிப்படையில் செய்துகொள்ளப்படாமல் சொந்த விருப்பத்தின் காரணமாக நடைபெறுகின்றன; உறுப்பினரும் கலப்புத் திருமணம் செய்துகொண்டால் அவருக்குத் தங்க மெடல் பரிசும் கிடைக்கும் -- அவர்களுடைய குழந்தைகளுக்குச் சலுகைகளும் கிடைக்கும்."

கே. டி. கே. தங்கமணி (வலது கம்.):—"கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களைக் கிராமங்களில் தள்ளிவைக்கிறார்கள்; அப்படிச் செய்யும் சமுதாயத் தலைவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ?"

அமைச்சர் :—"இதெல்லாம் சீர்திருத்தக் கொள்கைகள் ஆகும்; இதைக் கட்டாயப்படுத்தியோ அல்லது தண்டனை கொடுப்பதன் மூலமோ செய்ய முடியாது; அதை ஊக்குவிக்கப் பரிசு கொடுத்துச் சலுகையும் கொடுக்கப்படுகிறது."

காவேரிமணியம் (தி. மு. க):— "கலப்புத் திருமணத் தம்பதிகளின் குழந்தைகளுக்கு உத்தியோகத்தில் சலுகை உண்டா ?"

அமைச்சர் :—"உத்தியோகத்தில் சலுகை இல்லை; ஆனால், தம்பதிகளில் இருவரில் ஒருவர் தாழ்த்தப்பட்ட ஒருவராக இருக்கவேண்டும் என்பதால், தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் எல்லாச் சலுகைகளும் இவர்களுக்கும் கொடுக்கப்படுகின்றன."

வீராசாமி (தி. மு. க.):—"பரிசு கொடுத்தால்கூட அதிகப்பேர் கலப்புத் திருமணம் செய்துகொள்ள முன்வருவதில்லை; இந்த வேலையில்லாத் திண்டாட்டக் காலத்தில் அவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்கும் என்று தெரிந்தால், அதிக பேர் கலப்புத் திருமணம் செய்வார்களே; ஆகவே, அரசாங்க வேலையில் அவர்களுக்கு இடம் ஒதுக்கப்படுமா ?"

அமைச்சர் :—"கலப்புத் திருமணம் செய்பவர்கள் பெரும்பாலும் கொள்கை அடிப்படையில் அல்ல -- விருப்பத்தின் காரணமாகவே செய்கிறார்கள்; அவர்களுக்கெல்லாம் இடம் ஒதுக்கி வேலையில் சேர்ந்த பிறகு, அந்தத் தாழ்த்தப்பட்ட பெண்களை விட்டுவிட்டுப் போய்விடக்கூடும்; ஆகவே உத்தரவாதம் இல்லாமல் இருக்கிறது."

மெ. மலைச்சாமி (தி. மு. க):— "கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களில் ஒருவர் தாழ்த்தப்பட்டவராக இருக்க வேண்டும் என்று இருக்கிறது; அப்படியானால், உயர் சாதிக்காரரும் -- பிற்பட்ட வகுப்பினரும் திருமணம் செய்துகொண்டால் அது கலப்புத் திருமணம் ஆகுமா ?"

அமைச்சர் :—"தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரை ஒதுக்கிவைக்கிறார்கள்; அதைத் தவிர்க்கவே கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களில் ஒருவர் தாழ்த்தப்பட்டவராக இருக்க வேண்டும் என்று வைத்திருக்கிறோம்; முற்போக்குச் சமுதாயத்தவரும் -- பிற்பட்ட வகுப்பினரும் திருமணம் செய்துகொண்டால் அது புரட்சிகரமான திருமணம் ஆகாது; சமுதாயத்தில் அவர்கள் சமாளித்துக்கொள்ள முடியும்."

இராசாங்கம் (தி. மு. க.):— "தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில் உள்ள வறுமையை ஒழிக்கவே இவ்வாறு கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு அரசாங்க வேலையில் இடம் ஒதுக்கப்படுமா ?"

அமைச்சர் :—"தம்பதிகளில் ஒருவர் தாழ்த்தப்பட்டவராக இருப்பதால் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய எல்லா சலுகையும் அவர்களுக்குக் கிடைக்கிறது."

கோவை செழியன் (தி.மு க.):— "திருமணங்கள் சொர்க்கத்தில் நிர்ணயிக்கப்படுகின்றன; ஆகவே, திருமணங்கள் பூமியில் தான் நடக்கிறது என்பதை மெய்ப்பிக்கக் கலப்புத் திருமணத் தம்பதிகளை ஊக்குவிக்கச் சட்டத்தின் மூலமோ -- சலுகைகள் மூலமோ உற்சாகப்படுத்தப்படுமா ?"

அமைச்சர் :— "கலப்புத் திருமணங்கள் நரகத்தில்தான் நடக்கின்றன."

அனந்தநாயகி (சிண்டிகேட்):— "கலப்புத் திருமணங்கள் நரகத்தில்தான் நடக்கின்றன என்று அமைச்சர் குறிப்பிடுவது, கலப்புத் திருமணம் செய்துகொள்ள விரும்புபவர்களை அச்சுறுத்துவதாக இருக்கிறது; ஆகவே, அதை மாற்றி, 'உலகத்தில் நடக்கிறது' என்று கூறுவாரா ?"

அமைச்சர் :—"உறுப்பினர், தமது கேள்வியில், 'சொர்க்கத்தில் நடக்கிறது' என்றார்; எங்களுக்குச் சொர்க்கத்திலும், நரகத்திலும் நம்பிக்கையில்லை; 'சொர்க்கம்' என்று சொன்னதால், பதிலுக்கு, 'நரகம்' என்று சொன்னேன்."

பாலசுந்தரம் (தி.மு.க.):—"கலப்புத் திருமணத்தில் பிறந்த பிள்ளைகள், பிறகு, எந்தச் சாதியைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள் ?"

அமைச்சர் :— "தந்தை வழி சாதியே கையாளப்படுகிறது."

ஊத்தங்கரை கிருஷ்ணமூர்த்தி (தி மு.க.):—"ஏற்கனவே திருமணமானவர், கலப்புத் திருமணம் செய்துகொள்ள முன்வந்தால், அவருக்குத் தண்டனையிலிருந்து விடுதலை உண்டா ?"

அமைச்சர் :—"அதை, முதல் மனைவி ஏற்றுக்கொள்ளமாட்டாள்; சட்டப்படி முதல் மனைவிக்குத் தனி உரிமை இருக்கிறது."

காபி விலையைக் குறைக்க நடவடிக்கை

உணவு அமைச்சர் ப.உ. சண்முகம் விளக்கம்

சென்னை, அக். 22—

தமிழகச் சட்டப் பேரவையில், காபி விலையைக் குறைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றி உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும்—அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :—

டென்னிஸ் (சிண்டிகேட்):—"காபி விலையைக் குறைக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?"

ப. உ. சண்முகம் :— "கடந்த ஆண்டு காபி உற்பத்தி குறைந்ததால் விலை அதிகமாகியது; காபி வாரியத்தினரும் காபித்தூள் விற்பதை நிறுத்திவிட்டனர்; மத்திய அரசிடம் இதுபற்றி எடுத்துக் கூறப்பட்டது; இந்த ஆண்டிலிருந்து காபி வாரியத்தின் மூலம் காபி விற்பனை நடந்து வருகிறது.

"காபிக் கொட்டை விலை குறைந்திருக்கிறது; சிறிது தாராளமாகக் கிடைக்கிறது.

"காபி விலையைக் குறைப்பது பற்றி ஓட்டல் அதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது; அதன் காரணமாக காபி விலை ஒரு கோப்பை 30 காசுகளிலிருந்து 25 காசாகக் குறைக்கப்பட்டது.

"ஓட்டல்காரர்களுக்குக் காபிக் கொட்டை கொடுக்கும்படி காபி வாரியத்துக்கு எழுதப்பட்டது; ஆனால் காபி வாரியத்தார் அதற்கு மறுத்துவிட்டார்கள்; 'ஏலத்தில்தான் அவர்களும் எடுக்க வேண்டும்' என்று கூறிவிட்டார்கள்."

டென்னிஸ் :— "காபிக்குத் தேவைப்படும் சர்க்கரை, பால் இவற்றின் விலை குறைக்கப்படுமா ?"

ப. உ. சண்முகம் :—"சர்க்கரை விலை, கட்டுப்பாட்டு விலையை விடச் சிறிதுதான் ஏறியிருக்கிறது; காபித் தூளும் வேண்டிய அளவு கிடைக்கிறது; பால் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விலையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

பொன்னப்ப நாடார் (சிண்டிகேட்):—"முன்பு காபி வாரியத்தினர் காபித் தூளை விற்று வந்தார்கள்; இடையில் நிறுத்திவிட்டார்கள்; மீண்டும் அவ்வாறு விற்க ஏற்பாடு செய்யப்படுமா ?"

ப. உ. சண்முகம் :—"காபி விற்பனையை நேரடியாகத் தனியாரிடம் கொடுக்க முடியாது -- அரசாங்கம் வேண்டுமானால் எடுத்து நடத்தட்டும் -- என்று கூறினார்கள்; ஆனால் அது நம்மால் இயலாது; இப்போது மீண்டும் காபி வாரியத்தின் மூலம் விற்பனை செய்கிறார்கள்; விலை குறைந்துதான் இருக்கிறது."

வீராசாமி (தி மு.க.):—"கள்ளுக்கடை திறக்கப்பட்டுவிட்டதால், கிராமங்களில் பால் விலை மிகவும் மலிவாக கிடைக்கிறது; அப்படி இருந்தும் காபி விலையை குறைக்கவில்லையே -- ஏன் ?"

ப. உ. சண்முகம் :—"இம்மாதிரி ஓட்டல் பொருள்களின் விலையை குறைப்பதற்குச் சட்டமில்லை; சம்பந்தப்பட்டவர்களுடன் கூடிப் பேசித்தான்; குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்."

கணபதி (தி.மு.க.):—"காபி விலையைக் குறைக்கும்போது காபியின் தரத்தைக் குறையாமல் பார்த்துக் கொள்ளப்படுமா ?"

ப. உ. சண்முகம் :—"அதுபற்றியும் ஓட்டல் அதிபர்களுடன் தெரிவித்திருக்கிறோம்."

தேவராசன் (தி.மு.க.):—"கள்ளுக்கடை திறந்ததால ஓட்டல்களில் வியாபாரம் குறைந்துவிட்டது என்ற தகவல் அரசுக்குத் தெரியுமா ?"

ப. உ. சண்முகம் :—"அப்படித் தகவல் இல்லை."

அனந்தநாயகி :—"சில இடங்களில் காபி விலை 50 காசு -- 1 ரூபாய் என்று விற்கிறார்களே, ஏன் ?"

ப. உ. சண்முகம் :—"சிறப்பு ரக காபிகள் அந்த விலையில் விற்கப்படலாம்; ஓட்டல்களை 'ஏ. பி. சி.' என்று தனித்தனியாக விலை நிர்ணயம் செய்து அறிவிக்கும்படி கேட்டு இருந்தேன்; அது பற்றிப் பரிசீலனை செய்வதாகக் கூறியிருக்கிறார்கள்."

கூட்டுறவு வளர்ச்சி நிதி

தமிழக அரசு உத்தரவு

திருச்சி, அக். 22—

தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும், ரிசர்வ் நிதிக்கு ஒதுக்கிய பின்னர் நிகர இலாபத்தில் 5 சதவிகிதத்தைக் கூட்டுறவு வளர்ச்சி நிதிக்கு ஒதுக்க வேண்டுமென்று தமிழக அரசு உத்தரவிட்டிருக்கிறது.

கூட்டுறவு அலுவல்கள் வளர்ச்சிக்கு இந்த ஆண்டு, 'கூட்டுறவு வளர்ச்சி நிதி' ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது; இதற்கேற்ப, 1963-ம் ஆண்டைய கூட்டுறவுச் சங்க விதிகளில் 46-வது விதி திருத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்க நிதிகளில் நிதி ஒதுக்கீடு செய்வதற்காக விதிக்கப்பட்டுள்ள வரிசைக் கிரமத்தில், கூட்டுறவு வளர்ச்சி இரண்டாவது இடம் வகிக்கிறது.

கூட்டுறவுச் சங்க வளர்ச்சிக்கு ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட எல்லாப் பணிகளுக்கும் இந்த நிதி பயன்படுத்திக்கொள்ளப்படும்.

இந்த நிதியைத் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கம் பராமரித்து வரும்; அதிகாரிகளும் -- அதிகாரப் பற்றற்றவர்களும் அடங்கிய ஒரு குழு இந்த நிதியை நிர்வகித்து வரும்.

மாமல்லபுரத்துக்கு மற்றொரு பேருந்து

புதிய வழித்தடத்தில் விடப்படுகிறது

சென்னை, அக். 22—

சென்னையிலிருந்து மாமல்லபுரத்துக்கு இதுவரையில் 2 வழிகளில் அரசுப் பேருந்துகள் விடப்பட்டு வந்தன; இன்று மேலும் ஒரு புதிய வழியில் பேருந்துகள் விடப்படுகின்றன.

'99-ஏ' என்ற எண்ணுள்ள இப்புதிய பேருந்து, சென்னையிலிருந்து மீனம்பாக்கம் — தாம்பரம் — கூடுவாஞ்சேரி — செம்பரம்பாக்கம் — திருப்போரூர் வழியாக மாமல்லபுரம் செல்லும்.

சென்னையிலிருந்து காலை 5-15 மணி—9 மணி—பகல் 12 மணி—மாலை 5-05 மணி—இரவு 7-40 மணிக்கும்; மாமல்லபுரத்திலிருந்து காலை 5-20 மணி—8-20 மணி—பகல் 12-30 மணி—மாலை 3-25 மணி—இரவு 8 மணிக்கும் பஸ்கள் புறப்படும்.

சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லக் கட்டணம் ரூ. 2-25; பயண நேரம் 2 மணி 40 நிமிடங்கள்.

சைதை மருத்துவமனை

100 படுக்கைகளுடன் விரிவாக்கத் திட்டம்

சென்னை, அக். 23—

சைதாப்பேட்டை அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்கான ரூ 15 இலட்சம் திட்டம் தமிழக அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

20 படுக்கைகளிலிருந்து 100 படுக்கைகளாக்குவது நோக்கமாகும்.

"இம்மருத்துவமனையில் மருந்து வாங்கிப் போவோரே நாள்தோறும் 1,000 பேர்" என்று மருத்துவ அதிகாரி கூறினர்.

ஓராண்டில், உள்ளிருந்து 2300 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர்.

ஆழ்கடல் மீன் பிடிப்புக்குப் புதிய இயந்திரப் படகுகள்

தமிழக அரசு வாங்கும்--சட்டப் பேரவையில் அமைச்சர் சத்தியவாணிமுத்து தகவல்

சென்னை, அக். 22—

"ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்காக இழுவை இயந்திரப் படகுகள் வாங்கும் எண்ணம் உண்டா ?"

என்று ஏ. எம். இராசா சட்டமன்றத்தில் கேட்டார்; அதற்கு அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், '57 அடி உள்ள 4 இழுவை இயந்திரப் படகுகள் வாங்கத் திட்டமிட்டிருக்கிறோம்' என்று பதில் அளித்தார்.

கே. டி. கே. தங்கமணி (வலது கம்யூ.):—"அண்மையில் இயந்திரப் படகுக்காரர்களுக்கும் -- கட்டுமரப் படகுக்காரர்களுக்கும் திருச்செந்தூர் அருகில் மோதல் ஏற்பட்டு -- அதனால் படகுகள் எரிக்கப்பட்டுள்ளன; அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதா ?"

அமைச்சர் :—"ஆண்டுக்கு 150 விசைப் படகுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன; மீன் பிடிப்பதில் கட்டுமரத்துக்காரர்களுக்கும் -- விசைப் படகுக்காரர்களுக்கும் இடையே கடலில் மீன் பிடிப்பது சம்பந்தமாக எல்லைத் தகராறு நீண்ட காலமாக இருந்துவந்திருக்கிறது; கரையிலிருந்து 15 மைலுக்கு அப்பால் யார் வேண்டுமானாலும் -- எந்த நாட்டுக்காரர் வேண்டுமானாலும் மீன்பிடிக்கலாம்; ஜப்பான்காரர்கள்கூட வந்து மீன் பிடிக்கிறார்கள்; ஆனால் 15 மைலுக்கு உள்ளே வந்து மீன் பிடிக்கும்போதுதான் தகராறு வருகிறது; இதில் பலமுறை சமரசங்கள் செய்யப்பட்டும் மீண்டும் பொறுமை இழந்து இம்மாதிரி அசம்பாவிதங்கள் நடந்துவிடுகின்றன."

கணபதி (தி. மு. க.):—"விசைப் படகுகளைப் பயன்படுத்தி இறால் மீனை நிறையப் பிடித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் எண்ணம் உண்டா ?"

அமைச்சர் :—"இப்போதே ஆண்டுக்கு ரூ. 2½ கோடிமுதல் ரூ. 3 கோடி அளவுக்கு இறால் மீன் ஏற்றுமதி செய்யப்படுகிறது; 4 இழுவைப் படகுகள் வந்ததும், எந்தெந்த இடங்களில் என்னென்ன மீன்கள் அதிகம் இருக்கின்றன என்று ஆய்வு நடத்தி, அதிக மீன்கள் பிடிக்கவே இந்தப் படகுகள் பயன்படுத்தப்படும்."

கா. வேழவேந்தன் (தி.மு.க.):— மீன் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமா ?"

அமைச்சர் :—"மீன் எண்ணெய் தயாரிக்கப் பயன்படும் சுரு மீன் மட்டும் இல்லாமல் எல்லா மீன் வகைகளும் எங்கெங்கு அதிகம் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்துக் கணக்கெடுக்க இந்தப் படகு பயன்படுத்தப்படும்; பிறகு மீன் பிடிக்க ஏற்பாடு செய்யப்படும்."

மூடிய ஆலைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை

அவசரச் சட்டம் பிறப்பிக்க டில்லி முடிவு

புதுடில்லி, அக். 22—

சில மாதங்களாகத் தொழிற்சாலைகளை மூடுவது அதிகரித்து வருவதால், தொழில்கள் (வளர்ச்சி -- ஒழுங்குபடுத்தல்) சட்டத்தில் மத்திய அரசு விரைவில் திருத்தம் செய்யலாம் என்று தெரிகிறது.

நவம்பர் 15-ம் நாளன்று துவங்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் இதற்கான திருத்த மசோதா வரலாம்; ஆனால், அதற்கிடையிலேயே அரசு ஓர் அவசரச் சட்டத்தை உடனடியாகப் பிறப்பிக்கலாம் என்று தெரிகிறது.

நிர்வாகக் கோளாறின் காரணமாக மூடப்பட்ட ஆலைகளை அரசு எடுத்து நடத்த இந்த அவசரச் சட்டம் அதிகாரமளிக்கும்; அதே நேரத்தில், அந்தத் தொழில்களின் முந்திய பொறுப்புக்களை அரசு ஏற்கவேண்டிய அவசியம் இருக்காது.

மேற்கு வங்கத்தில் மட்டும் 400 தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன.

ஒரு தொழிற்சாலை மூடப்படாமல் இருந்து புலன் விசாரணை நடக்கும்போது, அதன் உற்பத்தியில் சில தரங்களை நிர்ணயித்து -- அது மூடப்படாமல் தடுப்பதற்குத் தொழில் வளர்ச்சி--ஒழுங்குபடுத்துதல் சட்டம் வகை செய்கிறது.

ஆனால் இந்தச் சட்டப்படி திடீரென்று தொழிற்சாலைகள் மூடப்படுவதைத் தவிர்க்க முடிவதில்லை; ஆகையால் சட்டத்தில் ஒரு திருத்தம் அவசியமாகிறது என்று கருதப்படுகிறது.

இத்துடன், தொழில் தகராற்றுச் சட்டத்திலும் திருத்தம் செய்ய அரசு எண்ணியுள்ளது.

ஒரு தொழிற்சாலையை மூடுவதற்குமுன் அத்தொழிற்சாலை எந்த மாநிலத்தில் உள்ளதோ அந்த மாநில அரசுக்கு, சம்பந்தப்பட்ட தொழிற்சாலை அதிபர்கள் 60 நாள் நோட்டீசு அளிக்க வேண்டும்.

சிறப்பான வாழ்வின் திறப்பு விழா !

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு ; ரூ. 1,00,000

மொத்தப் பரிசுத் தொகை:

ரூ. 7,00,000*

மொத்தப் பரிசுகள் : 2132

குலுக்கல் நாள்:

31-10-1971

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1-தான்

	ஒவ்வொரு வரிசைக்கும் ஒரு முதல் பரிசு	ரூ. 1,00,000
5	இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10,000/-	ரூ. 50,000
10	மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5,000/-	ரூ. 50,000
50	நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1,000/-	ரூ. 50,000
1000	ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 100/-	ரூ. 1,00,000
		ரூ. 3,50,000

இதுவரை தமிழ்நாடு பரிசுச் சீட்டால் உருவாகியுள்ள லட்சாதிபதிகள்; 256

வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.

* 2 வரிசைகள் வெளியீட்டுக்கு உட்பட்டது.



‘சாதாரண குடிமகன் அரசாளும் காலம் இது’

‘மன்னர்களின் காலத்து உரிமைகள் இன்னமும் நீடிக்க முடியாது’

‘காலத்திற்குத் தகுந்தாற்போல் சட்டங்கள் மாறுவது என்பது தவறானது அல்ல’

அரசியல் சட்டத் திருத்த மசோதாமீது சட்டப் பேரவையில் நாவலர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, அக். 23—

“‘அரசன் மகனே அரசாள வேண்டும்’ என்றும், ‘அரசனின் மூத்த மகன் ஒழுக்கக் கேடானவனாக இருந்தாலும் அவனே ஆளவேண்டும்’ என்றெல்லாம் அந்தக் காலத்தில் இருந்தது !

“எத்தனைத் திருமணங்கள் வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்றும் அந்தக் காலத்தில் இருந்தது ; இப்போது அந்த நிலைமை மாறிவிட்டது ; சமத்துவத்தை ஏற்படுத்துவதில் இடையூறாக இருக்கும் உரிமைகள்தான் கட்டுப்படுத்தப்படுகின்றன !

“மன்னாதி மன்னர்கள் காலத்தில் வராத உரிமைகள் சாதாரணக் குடிமக்கள் வாழும் இந்தக் காலத்தில் வந்திருக்கின்றன ; சாதாரணக் குடிமகன் முதலமைச்சர் ஆகும் உரிமை எந்த மன்னர் காலத்திலும் இருந்ததில்லை !

“கோழி கூவும் முன்பு எழுந்து கோட்டான் கூவும் நேரம் வரையில் வேலை செய்து — கொடுக்கும் கூலியை வாங்க வேண்டும் என்ற நிலைமை அன்று இருந்தது ; அதன் பிறகு, ‘உழைப்புக்கேற்ற ஊதியம்’ என்று சட்டம் இன்று வந்துவிட்டது !

“‘சக்திக்கேற்ப உழைக்க வேண்டும் ; தேவைக்கு ஏற்ப பெறவேண்டும்’ என்ற நிலையை நோக்கி உலகம் நகர்ந்து போகிறது ! ‘கோடானுகோடி மக்கள் நலம் பெற — ஒரு சிலரின் பரம்பரை நலன்கள் பாதிக்கும் என்பதற்காக — நல்ல சட்டங்களைப் புறக்கணிக்க முடியாது’ என்று முதலமைச்சர் அவர்கள் மேலவையில் கூறியிருப்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

“அரசியல் சட்டம் அதனைத் தயாரித்த பல அறிஞர்கள் கொடுத்த நகல்களைக்கூட அரசியல் நிர்ணய சபை அப்படியே ஏற்கவில்லை ; அரசியல் நிர்ணய சபைகூட நியமிக்கப்பட்ட சபைதான் — தேர்ந்தெடுத்த சபை அல்ல ; எதிர்காலத்தில் மாநில உரிமைகள் அதிகம் பெறுவதற்கு இது தடையாக இருக்காது”

என்று நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், சட்டப் பேரவையில் 24-வது அரசியல் சட்டத் திருத்தத்துக்கு ஒப்புதல் அளிக்கும் மசோதாமீது நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசுகையில் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்ட 24-வது திருத்தத் தீர்மானத்திற்குத் தமிழ்நாடு சட்டப் பேரவை நேற்று ஒப்புதல் அளித்தது.

இரண்டு நாட்களாக நடைபெற்ற விவாதத்திற்குப்பின் நடைபெற்ற வாக்கெடுப்பில், தீர்மானத்திற்கு ஆதரவாக 93 பேர் வாக்கு அளித்தனர்.

சுதந்தராக் கட்சியைச் சேர்ந்த 3 பேர் மட்டுமே எதிராக வாக்கு அளித்தனர்.

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், விவாதத்திற்குப் பதிலளிக்கையில் மேலும் தெரிவித்த கருத்துக்களாவன :—

“காலத்திற்குத் தகுந்தாற்போல் சட்டங்கள் மாறுவது என்பது தவறானது அல்ல ; கருத்து மாற்றத்திற்குத் தகுந்தாற்போல் சட்டமாற்றங்கள் ஏற்பட்டே தீரும்.

“சட்டங்களை இயற்றுபவர்கள், மக்களின் பிரதிநிதிகள் ; மக்களுக்காகச் சட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன ; அந்த மக்களின் நன்மைகளுக்காகச் சட்டங்களைத் தகுந்தபடி மாற்றியமைப்பது தவறானது அல்ல !

“இந்தத் திருத்தம் அடிப்படை உரிமைகளைப் பறிக்காது ; அவ்வாறு பறிக்கப்படுமானால், நாட்டில் உள்ள அனைத்துச் சட்டமன்றங்களும் சேர்ந்துகொதித்தெழும்.

உண்மையில் அடிப்படை உரிமைகள் 24-வது அரசியல் சட்டத் திருத்தத்தினால் பாதிக்கப்படவே இல்லை ; பேச்சுரிமையும் பாதிக்கப்படாது.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கோரும் தமிழக அரசின் கோரிக்கைகளோ, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளோ இதனால்பெரிதும் பாதிக்கப்படாது.

உறுதியளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளில் மேற்கொண்டு உரிமைகள் எதையேனும் சேர்க்கவோ — அடிப்படை உரிமைகளை அனுபவிக்கத் தடையாக உள்ளவற்றை அகற்றவோ — திருத்தவோ இந்தத் திருத்தம் வழிவகை செய்கிறதே தவிர, அடிப்படை உரிமைகளை எதனையும் இது பாதிக்கவில்லை,

24-வது திருத்தம் அளிக்கப் போகும் அதிகாரம் இந்தியாவின் தலைமையமைச்சருக்கோ அல்லது மத்திய அரசுக்கோ அல்லது மத்திய அரசின் ஆளுங் கட்சிக்கோ தரப்படவில்லை ; நாடாளுமன்றத்திற்குத்தான் அளிக்கப்படுகிறது ; ஆகவே, தலைமையமைச்சர் சர்வாதிகாரியாக மாறிவிட முடியாது. மத்திய அரசு சர்வாதிகார அரசாக மாற முடியாது.

நாடாளுமன்றத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் 500-க்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள் ; அப்படி ஏதேனும் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் எதனையாவது செய்தால், நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெற்றாக வேண்டும் ; நாட்டில் உள்ள மாநிலச் சட்டமன்றங்களின் ஒப்புதல்களைப் பெற்றாக வேண்டும் ; ஆகவே, நமக்கு இத்தகைய பாதுகாப்பு ஏற்பாடுகள் இருப்பதால் எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

சமதர்மமும் சமத்துவமும், சனநாயகமும் சனநாயக உரிமைகளும் வாழவகை செய்யும் — மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற உதவி செய்யும் இந்த 24-வது திருத்தத்தை நிறைவேற்றித் தரவேண்டும்.”

அமைச்சர் செ.மாதவன் விளக்கம்

விவாதங்களில் குறுக்கிட்டு சட்ட அமைச்சர் திரு. எஸ். மாதவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“இந்த அரசியல் சட்டத் திருத்தத்தினால் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படவில்லை.

தனி மனிதனுடைய சொத்துரிமையை ஆதரிக்கின்ற சனநாயகச் சக்திதான் நாட்டில் இருக்கிறது.

சிறுபான்மையினர் உரிமைகள் இதனால் பாதிக்கப்படும் என்று கூறப்படுவதும் சரியல்ல !

இயற்றும் சட்டங்களை மாற்றியமைக்க நாடாளுமன்றத்திற்கு உரிமைகள் உண்டு.

கோடுக்கின்ற சட்டத்திற்கு நீதிமன்றம் விளக்கம் தரலாமேயன்றி, ‘இந்த விதமான சட்டம்தான் வேண்டும்’ என்று சொல்லும் உரிமை எந்த சனநாயக நாட்டிலும் நீதிமன்றங்களுக்கு இல்லை.”

பூமியைச் சுற்றும் ராக்கெட்டு

பிரிட்டனும் முதல் தடவையாக பறக்கவிடுகிறது

ரூ. 3.60 கோடி செலவில் தயாரிக்கப்பட்டதாம்

இலண்டன், அக். 23—

இதுவரையில் அமெரிக்கா, இரஷ்யா, சீனா ஆகிய நாடுகளே பூமியைச் சுற்றும் ராக்கெட்டுகளைப் பறக்கவிட்டிருக்கின்றன ; இப்போது இங்கிலாந்தும் முதல் தடவையாக பூமியைச் சுற்றும் ராக்கெட்டைப் பறக்கவிடுகிறது.

ஆஸ்திரேலியாவிலுள்ள ‘ஊமரா’ எனும் நகரிலிருந்து வரும் திங்கட்கிழமையன்று பறக்கவிடப்படவிருக்கும் இந்த ராக்கெட்டு, ரூ 3.60 கோடி செலவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது ; சிறப்பு மிக்க கருவிகள் பல இதில் பொருத்தப்பட்டிருக்கின்றன.

வானவெளியில் ராக்கெட்டுகளுக்குச் சேதம் விளைவிக்கும் தூசிகள் பற்றி இந்த ராக்கெட்டு தகவல்களைப் பூமிக்கு அனுப்பும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, குமாரநாராயண செட்டி தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

24—10—71

சென்னை முதல் வட்டம்

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நற்பணி மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு சூரியநாராயண செட்டித் தெரு ‘அறிவகம்’ அருகில் ; தலைவர் : சே. அரசு ; கொடியேற்றுவோர் : புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். ; பேசுவோர் : மு. வேதாசலம் எம்.எல்.ஏ., எஸ். ஏ. அசோகன், தேங்காய் சீனிவாசன், கே. துரைராசு எம்.சி., இரா. மு. மனோகரன் எம்.சி., பூ. நாகலிங்கம்.

சென்னை 7-வது வட்டம்

எம்.ஜி.ஆர். கலை மன்றச் சார்பில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., மற்றும் ‘ரிக்‌ஷாக்காரன்’ திரைப்படக் கலைஞர்கட்குப் பாராட்டு ; மாலை 7 மணிக்கு இராபின்சன் பூங்கா அண்ணா சிலை அருகில் ; தலைவர் : அமைச்சர் சி. பா. ஆதித்தனார் ; பாராட்டும் பரிசு வழங்குபவர் : சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் ; பாராட்டுரை : மேயர் சா. கணேசன், என். டி. இராமாராவ், பிரேம் நசீர், கிருஷ்ணன்–பஞ்சு, கவிஞர் கண்ணதாசன், அப்துஸ் சமத் எம்.பி., நீலநாராயணன் எம்.எல்.சி., மு. வேதாசலம் எம்.எல்.ஏ., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ.

27—10—71

பம்பாய்

அம்பர் நாத் பேரறிஞர் அண்ணா நினைவு மன்றச் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா ; மாலை 7 மணிக்கு குண்டோலி மாரியம்மன் திடலில் ; தலைவர் : வி. மன்னன் ; பேசுவோர் : மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., சொ. காவேரிமணியம் எம்.எல்.ஏ., நெல்லை வை, சங்கரன், எஸ். தியாகராசன், ஆரியசங்காரன், த. மு. பொற்கோ, பெ. சு. கலைச்செல்வன், திருமதியழகன், எஸ். எம். சுப்பையா.

28—10—71

பம்பாய்

மலாடு தி.மு.க. சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா ; இரவு 8 மணிக்கு மதுமையாசால் தத்தா மந்திர் வீதி தமிழ்ச் சங்கம் அருகில் ; தலைவர் : ஆ. சங்கரன் ; பேசுவோர் : மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., காவேரிமணியம் எம்.எல்.ஏ., எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, இல. செல்வராசன். ஜே. ஈசாக்கு, ஏ. இரத்தினவேல் பாண்டியன், ஆர். எஸ். மிஸ்ரா, மற்றும் பலர்.

அரசுத் தலைமைச் செயலாளர் பதவி

தகுதி உயர்த்தப்பட்டுள்ளது

சென்னை, அக். 23—

“மாநில அரசுகளின் தலைமைச் செயலாளர்களின் பதவி நிலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது ; வருவாய்த் துறை (ரெவின்யூ) முதல் உறுப்பினர் பதவியின் நிலையையும் உயர்த்தும் யோசனை மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது”

என்று, தமிழகச் சட்டமன்ற மேலவையில், திரு. ஜி. சுவாமிநாதனின் (சுதந்.) கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் தெரிவித்தார்.

“ரூ. 3 000 மாதச் சம்பளத்தில் இரண்டு கூடுதல் செயலாளர் பதவிகளை உண்டாக்க வேண்டும் என்ற தமிழக அரசின் யோசனையும் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தொழிலாளர் நல அமைச்சர்

என். வி. நடராசன் நிகழ்ச்சிகள்

அக். 27 காலை 6-51 மணி : சேலம் ; 10-மணி : இராசிபுரம்—கண்காட்சியைத் திறந்து வைத்தல்—இராசிபுரம் வட்டத்தில் திரு. ஆர். நைனாமலை எம்.எல்.ஏ. அவர்கள் வகுத்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளல்.

வேளாண்மைத் துறை அமைச்சர்

அன்பில் தர்மலிங்கம் நிகழ்ச்சிகள்

அக். 24 காலை : கரூர்—திருமணம் ; மாலை 5 மணி : சேலம்—தந்தை பெரியார் அவர்களின் 93-வது பிறந்த நாள் விழா.

போக்குவரத்துத்துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன் நிகழ்ச்சிகள்

அக். 24 காலை 5-16 மணி : பண்ணுருட்டி ; 8 மணி : வடலூர்—திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளல்.

ஐ. நா. விழா

ஐக்கிய நாடுகள் நாள் விழா 24—10—71 மாலை 6 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கில் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும் ; திரு. யாகஹீரோ மட்சுவேகா, எஸ். வி. சிட்டிபாபு ஆகியோர் சொற்பொழியாற்றுவர் ; கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

மண்டபத்தில் உள்ள மீன் வள ஆராய்ச்சி நிலையம்

‘முக்கியத்துவம் குறையாது’ என உறுதிமொழி

சென்னை, அக். 21—

“மண்டபம் கடல் வள ஆய்வு நிலையத்தின் முக்கியத்துவம் குறையாமலும் அங்குள்ள பணியாளர்களின் எண்ணிக்கைக் குறையாமலும் பார்த்துக்கொள்வதாக இந்திய வேளாண்மை ஆய்வுக் கழக அதிகாரிகளும் — மண்டபம் நிலைய இயக்குநர் காசிமும் என்னிடம் உறுதியளித்திருக்கின்றனர்”

என்று அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தெரிவித்தார்.

மண்டபம் நிலையத்திலிருந்து கொச்சிக்கு மாற்றப்படுகிறவர்கள் பதவி உயர்வு அளித்தே மாற்றப்படுவதாகவும், விருப்பமில்லாதவர்கள் அங்கு செல்லத் தேவையில்லை என்றும் அமைச்சர் சொன்னார்.

மத்திய உணவு — வேளாண்மை அமைச்சர் பக்ருதீன் அலி அகமது சென்னையில் தங்கியிருந்தபோது அவரைத் தாம் சந்தித்து, ‘மீனவர்களுக்குத் தொழில் கடன் வழங்க ரிசர்வ் பாங்கி வகுத்துள்ள பட்டியல் இடம் தரவில்லை ; இதைத் தளர்த்த வேண்டும்’ என்று கேட்டுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

“வேளாண்மைப் பம்பு செட்டுகளுக்கு டீசல் எண்ணெய் பயன்படுத்துவதால் சலுகைகள் வழங்கப்படுகின்றன ; அதற்கு வழங்கும் சலுகைகள் அனைத்தும் மீன்பிடி விசைப் படகுகளுக்கும் வழங்கப்பட வேண்டும்” என்றும் மத்திய அமைச்சரிடம் தெரிவித்ததாகவும், இந்தக் கோரிக்கைகளை மத்திய நிதியமைச்சரிடம் எடுத்துக்கூறி ஆவன செய்வதாக பக்ருதீன் அலி அகமது மறுமொழி அளித்ததாகவும் அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் தெரிவித்தார்.